[9th November 1961

(இ) இது லைட் டிரான்ஸ்போர்ட்டை விட எவ்வளவு அதிகம்?

(உ) பழைய சம்பளக் கமிஷன் ரிப்போர்ட்படி சம்பளம் கொடுக்கப்படுகிறதா?

(எ) இல்லையென்றால் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) There is no distinction in the scales of pay of drivers of heavy transport and light transport vehicles so far as the Madras State Transport Department is concerned. The following are the scales of pay of the drivers in that department :—

Drivers (Selection Grade)—Rs. 90—3—105—4—125.

Drivers (Ordinary Grade)—Rs. 80—2—100.

(உ) Yes, Sir.

(எ) Does not arise.

SRI K. VINAYAKAM : Sir, is it a fact that the scale of pay and emoluments paid to the heavy-endorsed drivers of the Government Transport is lower when compared to that of drivers employed in Messrs. T.V.S. & Sons and other private enterprises? Will the Government consider the desirability of increasing the rate to that standard so as to attract efficient men?

THE HON. SRI V. RAMAIAH : When we take into account the conditions of employment of Government drivers, we cannot take into account only their pay for the purpose of increasing or decreasing their emoluments There are so many other factors which have to be considered. In consideration of all this, we are also able to get good drivers.

Agricultural implements (prizes to fabricators)

* **1930 Q.—SRI S. M. ANNAMALAI** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயக் கருவிகள் செய்பவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதைக் குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார்களா?

(இ) இதற்காக மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் தருகிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The Indian Council of Agricultural Research has sanctioned a scheme for the award of President's Gold Medal and prizes for outstanding contribution in the field of production of agricultural implements. Four copies of the rules are placed in the Legislature Secretariat Library. The Ministry of Commerce and Industry sought the co-operation of the State Government to inform all the manufacturing concerns of agricultural implements in this State of the scheme and advise them to participate in the competition. Action has been taken accordingly.

9th November 1961]

SRI S. M. ANNAMALAI : ஸார், விவசாயக் கருவிகள் என்றால் என்னென்ன பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன? விஞ்ஞான முறையிலும் நவீன முறையிலும் தயாரிக்கப்படுகின்ற கருவிகள் மட்டும்தானா? அல்லது பழைய கருவிகளையே தயாரிக்கலாம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையில் இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழைய கருவிகள், புதிய கருவிகள் என்று ஒன்றும் பிரிக்கப்படவில்லை. பழைய கருவிகளையே புதுப்பித்து தயாரிக்கலாம். விஞ்ஞான முறையிலும் மாற்றி அமைக்கலாம். பொதுவாக நம்மிடையே மாடுகள் இழுக்கின்ற கருவிகள் இருக்கின்றன. கையால் உபயோகப்படுத்துகின்ற கருவிகளும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில் தயாரிப்பவர்களுக்கு பரிசு கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலும் இதுபோன்ற விவசாயக் கருவிகளை கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்யவேண்டும் என்று மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? அப்படியென்றால் அதன் மீது நம்முடைய சர்க்காரின் அபிப்பிராயம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி இதிலிருந்து எழவில்லை. இதைப்பற்றி மேல் விவரங்கள் அறிய வேண்டுமானால் தனியாக கேள்வி போடவேண்டும். இதில் மத்திய சர்க்காருக்கோ அல்லது ராஜ்ய சர்க்காருக்கோ எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அதோடு இதில் பஞ்சாயத்து யூனியன்களும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இதில் வேண்டிய கவனம் செலுத்தி வருகிறது.

Agricultural implements (production)

* 1931 *Q.*—**SRI A. R. MARIMUTHU :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் விவசாய உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(இ) அங்கு என்ன என்ன கருவிகள் செய்யப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) A statement [a] is placed on the table of the House.

SRI A. R. MARIMUTHU : நவீன விவசாயக் கருவிகள் இப்போது விவசாயிகளுக்கு மிகவும் தேவையாக இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒவ்வொரு சென்டர் அமைத்து உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு தாலுகாவுக்கும் அமைப்பது என்பது சாத்தியமில்லை. கூடியமட்டும் இது விரிவாக்கப்படும்.

---

a Printed as Appendix IV on pages 114–115 infra.